# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Al-Ain, UAE



# மன்னா..

என் தேவனாகிய கர்த்தாவே,
நீர் நோக்கிப்பார்த்து,
எனக்குச் செவிகொடுத்தருளும்;
நான் மரணநித்திரை அடையாத படிக்கு என்
கண்களைத் தெளிவாக்கும்.

சங்கீதம்: 13:3




பொழிவு: 14
ஆகாரம்: 01

January '2022

# CSI TAMIL PARISH - ALAIN

UNITED ARAB EMIRATES



BEST WISHES

Let's celebrate together

# 2022

## HAPPY NEW YEAR

B.N Kariss Angelo

Mrs. Nancy Angelo & Rev. S. P Baskar

# New Year's Message

## FROM THE PASTOR

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் புதிய ஆண்டு-2022, நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

...... நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன். ஆதியாகமம்: 17:1,2

I am God Almighty, walk before me, and be "blameless, that I may make my covenant between me and you, and may multiply you greatly". Genesis 17:1,2

- கடவுளின் உடன்படிக்கையின் மூலமாக...
- கடவுளால் தெரிந்துக்கொள்ளப்படுகிறோம்...
- கடவுளால் ஆசீர்வதிக்கப் படுகின்றோம்...
- கடவுளால் அங்கீகரிக்கப் படுகிறோம்...

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, புதிய ஆண்டிற்குள் புதிய மாற்றங்களைத் தந்து நம்மை வழி நடத்தி புதிய ஆண்டை காண செய்த நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கிறோம். இந்த கோவிட் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக,பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, ஜெபிக்கவும் இந்த புதிய ஆண்டிலே அநேக மாற்றங்கள் ஏற்பட்டு திருச்சபையின் வளர்ச்சியிலும், ஊழியத்திலும்,திருச்சபை குடும்பங்களிலும், நமது பிள்ளைகளின் வாழ்விலும், கல்வியிலும் ஆண்டவர் அநேக ஆசீர்வாதங்களை கொண்டுவரும் படியாய் ஜெபிக்கும்படியாகவும். அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்....

*Rev. S. P. Baskar....*






# நம்பிக்கை மிகுந்த ஜெபம்

சங்: 13

**என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாத படிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். சங்கீதம்: 13:3**

**CONSIDER AND HEAR ME, O LORD MY GOD; ENLIGHTEN MY EYES, LEST I SLEEP THE SLEEP OF DEATH; PSALMS-13:3**

**முன்னுரை:** இந்த சங்கீதம் நம்பிக்கை மிகுந்த ஜெபம் ஆகும். இந்த சங்கீதத்தில் திரும்பத் திரும்ப எதுவரைக்கும் (அ)எத்தனை நாள் (சங்:13:1,2) என்ற கேள்வியானது நீண்ட நாட்களாக துன்புற்று, நம்பிக்கையை இழந்த தருவாயிலுள்ள ஒருவரின் மனக்குமுறலைக் காண்பிக்கின்றது. இந்த சூழ்நிலையில் தான் தன்னுடைய அவலக்குரலை எழுப்பி ஆண்டவரிடம் கேள்விக்கேட்பதை பிற சங்கீதங்களிலும் காணலாம். (சங்:79:5,சங்:89:16) ஆனாலும் இந்த சங்கீதம் ஆண்டவரின் பேரன்பில் நம்பிக்கை தளராமல் ஜெபிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. (சங்:13:5,6) இந்த சங்கீதம் வேதனையில் தொடங்கி (சங்:13:1,2) நம்பிக்கையில் வளர்ந்து (சங்:13:3,5) மகிழ்ச்சியில் முடிவடைகிறது (சங்:13:6)

**PSALM: 12 - THIS IS AN INDIVIDUAL LAMENT. THE WORSHIPER IS ON THE VERGE OF DESPAIR...**

**சங்கீதம்: 13:1-2; உள்ளக்குமுரளும்- புலம்பலும்**

எது வரைக்கும்.... எதுவரைக்கும்....(எத்தனை நாள்? எத்தனை நாள்)-இது துயரத்தில் உச்சக்கட்டத்தில் ஒருவருக்கு வெளிப்படும் சொற்கள் ஆகும். (சங்:79:5, சங்:89:46) நாட்களும், நேரமும் ஆண்டவரின் விருப்பத்திற்க்கு (அ) சித்தத்திற்கு கட்டுப்பட்டது என்பதை இது உணர்த்துகிறது. மேலும் விடாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர் என்பது ஆண்டவரே என்னுடைய ஜெபத்தை கேளும் உமது முகத்தை மறைத்துக் கொள்ளாமல் இரும் என்று ஜெபிப்பதின் அடையாளமாக புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

**சங்கீதம்: 13:3-5; பேரன்பின் நம்பிக்கை (விசுவாசம்)**

வ-3… என் கண்களைத் தெளிவாக்கும்… இது என் விழிகளுக்கு ஒளியூட்டும் என்பதைக் குறிக்கிறது. முதலில் புலம்புவதும் (சங்:13:1,2) இப்பொழுது அது ஜெபமாக மாறுகிறது (சங்:13:3) பார்வை மங்குவதை- நோய்க்கும்,துயரத்திற்கும் அறிகுறியாக அடையாளப்படுத்தப்படுகிறது. (சங்:6:7, சங்:38:10) கண்கள் தெளிவாக்குவது (அ) ஒளி பெறுவது என்பது குணங்களில் மாறுவதும் மற்றும் மகிழ்ச்சியின் அடையாளமாகவும் காண்பிக்கப்படுகிறது. அத்துடன் ஞானத்தை பெறுவதையும் சுட்டிக்காட்டுகிறது..

வ-5: நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இதயம் களிகூறும்….

இது ஆண்டவர் அளிக்கும் விடுதலை ஆகும். இதற்கு யேஷீவா என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் பொருள் துன்பங்களிலிருந்து மீட்கப்படுதல் (அ) விடுதலை பெறுதல் என்பதாகும். இந்த விடுதலை என்பது நோயிலிருந்து, துன்பத்திலிருந்து பெறுவதைக்குறிக்கலாம் (சங்:13:3,4) மேலும் இறுதி நாள் மீட்பையும் குறிக்கலாம் (சங்:67:2) எப்படி இருந்தாலும் ஆண்டவரே விடுதலை அளிப்பவர் என்பதையும் அவரது அன்பிற்கும், இரக்கத்திற்கும் அளவே இல்லை என்பதை அடையாளப்படுத்துகிறது…

**சங்கீதம்: 13:6: நன்றியின் பாடல் (ஜெபம்)**

வ-6: கர்த்தர் எனக்கு நன்மை செய்த படியால் அவரைப்பாடுவேன்…

இது ஆண்டவர் பல நன்மைகளை செய்துள்ளதை அடியவருக்கு அடையாளப்படுத்தப்படுகிறது. அத்துடன் அவர் எனக்கு எல்லாவற்றையும் உறுதியாக செய்வார் என்பதை வலியுறுத்துகிறது. கடந்த காலத்தில் செய்த நன்மைகளுக்காகவும்…… எதிர்கால நன்மைகளுக்காகவும் ஆண்டவரை நன்றியுடன் துதித்துப் பாடும் ஜெபம் இந்த சங்கீதத்தில் முடிகிறது…

**நிறைவாக:** இன்றைக்கு நாம் இந்த 2022-ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கும் நம் அனைவருக்கும் கடந்த கால வாழ்வில் துணையாய் இருந்த ஆண்டவர் எதிர்கால வாழ்விலும் துணையாய் இருந்து நன்மை செய்வார் என்ற நம்பிக்கை மிகுந்து ஜெபத்துடன் நம்மை அற்பணிக்கவும், தொடர்ந்து ஆண்டவருக்குள் விசுவாசத்தோடு நிலைத்திருக்கவும் அழைக்கப்படுகிறோம்….

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக….
ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்….

*Rev. S. P. Baskar*






கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பின் புதிய ஆண்டின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்..!!

**சால்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான். -மத்தேயு: 1:5**

Salmon begot Boaz by Rahab,Boaz begot Obed by Ruth, Obed begot Jesse.- Mathew:1:5

## ரூத்-கடவுள் பற்றுள்ளவர்:

நகோமியின் அன்பான மருமகள் என அழைக்கப்பட்டவர். இயேசு கிறிஸ்துவின் தலைமுறையில் இடம் பிடித்தவர். இவருடைய பெயரில் பழைய ஏற்பாட்டில் ஒரு புத்தகம் இருக்கிறது. இவர் ஒரு சிறப்பான, விசுவாசமுள்ள பெண்ணாக கருதப்படக் கூடியவர். இவ அதிக துன்பங்களை, கஷ்டங்களை, பாடுகளை சந்தித்தவர். திருமணமான குறைந்த ஆண்டுகளில் கணவனை இழந்தவர். தனித்துவிடப்பட்ட பெண்ணாக நம்பிக்கை இழந்தவராக தொய்ந்து போகாமல் கடவுள் மீது அதிக பற்று உள்ளவராய் வாழ்க்கையை சந்திக்க துணிந்தவர் இதற்கு அடிப்படையான காரணம் அவர் கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசம் ஆகும்.

## ரூத்-கடவுளுக்காக பாடனுபவித்தவர்:

மோவாபிய பெண்ணான இவர் யூத மரபிற்குள் வருவது ஒரு சிறப்புத் தன்மையாகும். யூதர்கள், இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமே பிறப்பார்

என்று நம்பிக்கொண்டிருந்த சூழலில் கடவுள் யூதர் அல்லாதவர் மூலமாகவும் உலக மீட்பு அளிப்பவர் என்பதற்கு ரூத்தின் வாழ்வே அடையாளமாக நினைவு கூற அழைக்கப்படுகிறோம். ரூத் வரலாற்று தலைமுறையை சந்தித்த தாய். இராகாபிலிருந்து இந்த தலைமுறைத் தொடர்பு வருவதைக்காணலாம், இராகாப் போவாசின் மூலம் சால்மன் பெற்றெடுக்கிறார், இவருக்கு ஓபேத் பிறக்கிறார், ஈசாய் மூலம் தாவீது பிறக்கிறார். (ரூத்:4:20-22) ஈசாயின் தலைமுறையில் இயேசு கிறிஸ்து பிறக்கிறார் (மத்தேயு: 1:1-5) இந்த தலைமுறையில் அவர் சந்தித்த பாடுகள் கடவுளுக்காக அனுபவித்தார் என்பது ரூத்தின் சிறப்புத் தன்மையாகும்...

**ரூத்: பண்புள்ளவர்:**

ரூத் நல்ல பண்பு உள்ளவர் ஆவார். ரூத்தின் வாழ்க்கை மூலம் நமக்கு வெளிப்படும் உண்மைகள் நிறையவே உள்ளன. வாழ்க்கை சூழல் மாறினாலும், கடவுள் வைத்திருக்கிற திட்டம் மாறாது என்பதில் நம்பிக்கை உடையவராயிருந்தார். பாடுகளும்,வேதனைகளும், வலிகளும் வாழ்க்கையில் அதிகமாக இருந்தது. ஆனால் இவற்றை மேற்கொள்வதற்கும், வெற்றி பெறுவதற்கு அவருடைய நல்ல பண்புகள் துணையாக இருந்தது. அதன் மூலமாக நல்ல வாழ்வைப் பெற்றவர் என்பதற்கு ரூத் ஒரு அடையாளமாகும்...

**நிறைவாக:**

இன்றைக்கு நாம் வாழுகின்ற இந்த உலகத்தில் நமக்கும் வருகின்ற துன்பங்கள், கஷ்டங்கள், பாடுகள், வேதனைகள், வலிகள் இவைகளை மேற்கொள்ள ரூத்தைப் போல நாமும் ஆண்டவரை விசுவாசித்து அவருக்காக பாடுகளை ஏற்றுக்கொண்டு நல்ல பண்புள்ளவர்களாக வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா....

*Mrs. E. Nancy Baskar...*







**நாம்
என்னசெய்ய
வேண்டுமென்று
நம்மை
அழைத்த
தேவனுக்கு
தெரியும்!**

**வேதாகம களஞ்சியம்**

**தெரியாது...! தெரியாது...!
இவர்களில் ஒருவருக்கும் தெரியாது**

- பேரழிவில் காப்பாற்றப்பட்டு, பேழையின் கதவு திறக்கப்படும்வரை. நோவாவிற்கு தெரியாது தேவன் தன்னை ஓர் புதிய உலகில் தரையிறக்குவாரென்று.
- எகிப்திற்கு வரும்வரை யோசேப்பிற்கு தெரியாது குழியில் கிடந்த தன்னை, தேவன் எகிப்திலே குபேரனாக்குவாரென்று. ஆதி 41:43.
- பெத்லகேம் வரும்வரை, ரூத்திற்கு தெரியாது போவாசின் மனைவியாவாளென்று. ரூத் 4:10
- மீனானது தன்னை நினிவேயின் கரையில் கக்கும்வரை, யோனாவிற்கு தெரியாது ஆண்டவர் தன்னை மீண்டும் நினிவே பட்டணத்திற்கே அனுப்புவாரென்று. யோனா 2:10
- ஜெபவீடு வரும்வரை, பேதுருவுக்கு தெரியாது தனக்காக ஒரு கூட்டம் இரவு ஜெபம் செய்கிறார்களென்று. அப் 13:17.
- பத்மு தீவிற்கு வரும்வரை யோவானுக்கு தெரியாது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை தான் எழுதுவேனென்று.
- இப்படி அநேகர் தங்களின் வாழ்வில், முழுமையாக தேவனது திட்டத்தை தெரிந்துக்கொள்ள முடியாதிருந்தும். தேவனோ அவர்களின் வாழ்வில், தமது நித்திய திட்டத்தை நிறைவேற்றினார்.

**நாம் என்னசெய்ய வேண்டுமென்று நமக்கு தெரியாமல்போனாலும்,
நம்மைக்கொண்டு என்ன செய்யவேண்டுமென்று,
நம்மை அழைத்த தேவனுக்கு தெரியும்!**




தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பில், வைணவ குடும்பத்தில் 1827’ஆம் சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணபிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தராய் மாறினார். கிருஷ்ணபிள்ளைக்கு தமிழ் மீது அதிக நாட்டம். இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையுமே எளிதாய் கற்றுத் தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம் வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தமிழ் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷினரி ஒரு புதிய_ஏற்பாட்டை கிருஷ்ணபிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த பிள்ளை தன் வேலையை விட்டு விலகினார். ஆனாலும் மிஷினரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது. அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தைத் திறந்துக் கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி_ராஜூ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ண பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்கூறினார்.

ஓர் இரவு; கிருஷ்ண பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ண பிள்ளை கிறிஸ்துவைக் குறித்து பாடல்களை எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் இவர் மூலமாக வெளி வந்தவையே. இந்தப்

படைப்புகளை முடிக்க 16 ஆண்டுகள் ஆயிற்று பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தின் மிகச்சிறந்த படைப்புகளில் இவை ஒன்றாகும். இவரை சிலர் கிறிஸ்டியன் கம்பன் என்றும் சில இடங்களில் குறிப்பிடப்படுகிறார். அவர் இயற்றிய சில பாடல்கள் இன்றும் தமிழ் புராட்டஸ்டன்ட் மக்களிடையே பரவலாக உள்ளன.

சத்தாய் நிஷ்களமாயொரு சாமிய மும்மில தாய்ச்
சித்தாயானந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நாயடியேன், கடைத்தேறுவனென் பாவந்தீர்ந்து
அத்தாவுன்னை யல்லா லெனக்கார் துணை யாருறவே?

கிருஷ்ணபிள்ளை
அவர்களின் தமிழ்
சிறப்பு பாடல்கள்

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
பரலோக ராஜாவை பணிகின்றேனே
பாவியம் என்னையும் நேசித்தீர்
பாசமாய் பாவங்கள் மன்னிதீரே
பரிசுத்த சாதியாய் மாற்றிநீரே
பாடைகின்றேன் உம் பாதம் எந்தனையே

மாபெரும் மிஷினரிகளான சர்ஜென்ட், உவாக்கர், ஏமி கார்மைக்கேள் அம்மையார் உட்பட மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த இவர் 1900ம் ஆண்டு இதே நாள் பிப்ரவரி 3 ம் தேதி என்றென்றும் தேவனைப் புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார்.

அன்பரே! கிருஷ்ண பிள்ளையைப் போன்று இயேசுவை மட்டுமே பாடுகிறீர்களா?

(மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள் என்ற நூலிலிருந்து)




ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக உங்கள்
அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்.



# taste



**WOW… DELICIOUS….AWESOME….. MARVELLOUS…… EXCELLENT…….**

Aren't we more familiar with these kinds of descriptions ?

Definitely, it would be a YES from every human on this earth. May it be a literate or illiterate, a poor or a rich. The reason for this familiarity is FOOD, but the vitality is TASTE. TASTE seems to be an important factor in everything we do.

Even,  affected our taste buds. If you are a person who would travel any distance at any time of the day to have your favorite dish or drink at a specific shop then pat yourself for those efforts. Hat's off to you.

Similarly, all of us have tasted our GOD, **BUT how well have we tasted him?**

**How far have we travelled to taste our Redeemer?**

**Are we traveling to the destination of tasting HIM?**

The Psalmist says, **"Taste and see that the Lord is good, blessed is the one who takes refuge in HIM"** (Psalms 34:8).

It is vital for each one of us to spend time and take efforts to taste HIM. Today many Christians read the word and pray as a ritual, thinking that if we do not do so, then the day wouldn't go fine. Yes, I do agree that we need to submit and start our day with GOD. However, without enjoying the taste, if we just swallow the food (Word/God) then what is the ultimate meaning of our living?

Just reading the word or praying to God for hours together at any part of the day without tasting and enjoying HIM would never make sense to what we do.

To make it more lucid and to wrap it up - Is it possible for us to have Biriyani/Coffee without enjoying its taste?

## ∞ Nothing can taste delicious than our God ∞

Women's
FELLOWSHIP



# இலக்கை நோக்கி

‘விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்’ (எபிரெயர் 12:1).

நம்முடைய வாழ்க்கையின் ஓட்டத்தில் நாம் எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம்? அநேகர் இந்த உலகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் இயேசுவை மாத்திரமே நோக்கி ஓடிக்கொண்டிருப்பான். அவன் கிறிஸ்துவை உடையவன். கிறிஸ்துவின் வழிகளில் நடக்கிறவன். நீ கிறிஸ்தவன் என்று சொல்லுகிறாய் சரி, அப்படியானால் மேலே குறிப்பிட்ட காரியங்கள் உன்னில் காணப்படுகின்றதா? தேவன் உனக்கென்று திட்டமிட்டு காரியங்களை நடப்பிக்கிறவராக இருக்கிறார். அதில் அநேக பாடுகள், உபத்திரவங்கள் நிறைந்து காணப்படலாம். அதன் மத்தியில் நீ எவ்விதம் ஓடிக் கொண்டிக்கிறாய்? உன்னுடைய ஓட்டத்தில் சோர்வும், நம்பிக்கையின்மையும் காணப்படுகின்றதா? அல்லது கிறிஸ்துவின் பெலத்தோடு நீ ஓடிக்கொண்டிருக்கிறாயா?

‘நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது’ (எபிரெயர் 10:36) என்று வேதம் சொல்லுகிறது. இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளுகிறோம்? தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திற்கு வெற்றி நிச்சயம், ஆனால் அந்த வெற்றியை அடைய நாம் பொறுமையோடே ஓடவேண்டும். ஏனெனில் தேவன் அதை நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். அதை நிறைவேற்றக் கூடிய வழியை அவரே அறிந்தவர் என்பதை நினைவில் கொள். பொறுமையில்லாமல் நாம் ஜீவக் கிரீடத்தைப் பெற முடியாது. பொறுமையில்லாமல் நாம் தேவனுடைய மகத்துவமான காரியத்தைக் காண முடியாது. ஒரு கிறிஸ்தவனில் காணப்படுகின்ற அடிப்படை குணாதிசயம் பொறுமை. ‘சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்’ (13:10) என்று வேதம் சொல்லுகிறது. அதாவது சோதனைகளின் மத்தியில் கிறிஸ்தவனின் பொறுமையும் விசுவாசமும் காணப்படும் என்று வேதம் சொல்லுகிறது.


அருமையானவர்களே! நீங்கள் எவ்விதம் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்?

youth FELLOWSHIP

# TRAITS OF JESUS...



The traits of Jesus are quite different from the thoughts of the Priests (Pharisees and Sadducees) they thought the Messiah would be born in a rich family, save them from the Romans and so on. I gathered the top nine interesting traits of Jesus we can learn from him.



**Humble:**
Jesus was very humble we can see that in Mark 10:45. “For even the Son of Man did not come to be served, but to serve, and to give his life as a ransom for many”. This verse tells us that Jesus came to Earth to do what God told him to do.

**Hardworking:**
Jesus was Hardworking Mark 6: 3 states that “"*Is not this the carpenter, the son of Mary....* ". Jesus is said to be a carpenter in this verse. Jesus was the son of God the people reasoned that how can the son of God be a carpenter? This verse proves that Jesus is humble and hardworking too.

**Forgiving:**
Jesus died for our sins. So, if we ask Jesus to forgive us for the sins we had done. We remember Jesus died in the cross to wash away our sins.

**Helping:**
Jesus helped the fishermen to catch fish by asking them to throw the net on their side when they could not catch fish the whole night. The result was they caught a lot of fish.

**Spiritual:**
Though Jesus was the son of God he prayed to God every day. He also helped his disciples to pray and taught them the Lord’s Prayer.

**An egalitarian:**
Jesus treated everyone equally. He talked politely to people who hated him too.

**- Joshua Koshy**

# January

## BIRTHDAYS

| | |
|---|---|
| 2-JAN | MS. JOSHIKA VASHNI - D/O MRS. SALINI VIMALA |
| 2-JAN | MR. PREM JENIFFER |
| 4- JAN | MRS. HELINA – W/O MR. SANTHOSH JOEL KUMAR |
| 7-JAN | MSTR. DEVON CRASTILLON - S/O MR. RAJESH CHELLADURAI |
| 8-JAN | MR. ROSHAN - S/O MR. RAVINDRA |
| 12-JAN | MR. GEOVIN - S/O MR. GEORGE ROSE |
| 16-JAN | MR. ABINESH SOLOMON - S/O MR. ARUL DHAS |
| 17-JAN | MR. ANTHONY JESU RAJAN |
| 17-JAN | MR. KEVIN - S/O MR. JOEL RENJITH KUMAR |
| 18-JAN | MR. JOHN JOSEPH |
| 19-JAN | MR. D.L.DERRIK - S/O MR. DAVID LIVINGSTON |
| 20-JAN | MR. ABISHEK SOLOMON - S/O MR. ARUL DHAS |
| 22-JAN | MRS. PHILOMINA - W/O MR. ASHOK KUMAR |
| 22-JAN | MRS. E. NANCY ANGELO - W/O REV. S.P. BASKAR |
| 23- JAN | BABY. ZIA MIREN - D/O MR. VIJIN RAJ |
| 25-JAN | MRS. RAMYA MERGARATEE - W/O DR. PRADEEV |
| 27-JAN | MR. JONATHAN ASHER - S/O MR. SURESH RAJAN |
| 28-JAN | MRS. SATHVIKALAKSHMI - W/O MR. TIMOTHEUS |

## HAPPY Wedding ANNIVERSARY


| | |
|---|---|
| 03-JAN | MR. DIENSHAN & MRS. S. DIVYA SHERRIN |
| 05-JAN | MR. JAYAN DHARMARAJ & MRS. HELEN HEMABAI |
| 07-JAN | MR. PAUL GNANA PRABU.R & MRS. NIRMALA JENIFER |
| 11-JAN | MR. BELFER JOHN SIGAMONY & MRS. JEYANTHA |
| 21-JAN | MR. C. HAVIN HEBA & MR. R. JACKULIN MILKA |
| 30-JAN | MR. SATHISH KUMAR.T & MRS. SINDUJA |



WISH YOU MANY MORE HAPPY RETURNS OF THE DAY.
GOD BLESS YOU ALL

# Color by Number for People Disobeyed God

Color each section by the colors shown in the list at the bottom of the page. leave unnumbered sections white. If you don't have all of the colors listed make your best color choice.



1. Light green 2. Light blue 3. Red 4. Purple 5. Skin 6. Pink
7. Dark green 8. Gray 9. Dark Brown 10. Orange

BEGINNER

# People Disobeyed God
# Coded Words

Each number stands for a letter of the alphabet. Write the correct letter in the blank to find the coded words and phrase.

**Code key**

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

___ ___ ___ ___ ___ ___
7 1 18 4 5 14

___ ___ ___ ___
5 4 5 14

___ ___ ___ ___
20 18 5 5

___ ___ ___ ___ ___
6 18 21 9 20

___ ___ ___ ___ ___ ___ ___
19 5 18 16 5 14 20

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
4 9 19 15 2 5 25 5 4

God cared for

___ ___ ___ ___    ___ ___ ___    ___ ___ ___
1 4 1 13    1 14 4    5 22 5


Primary

# People Disobeyed God Word Search

Find the words on the list that are hidden in the puzzle. The words can be left to right, up and down, or diagonally.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | I | T | N | U | S | L | A | E | D | E | N | D |
| U | G | A | R | D | E | N | T | V | E | R | I | T |
| L | E | R | S | E | R | T | E | I | D | I | T | O |
| G | O | O | D | C | P | N | S | L | Q | U | I | S |
| N | S | E | Q | U | E | S | C | F | L | L | A | N |
| E | V | E | L | E | N | E | R | I | R | I | U | R |
| L | A | E | M | O | T | O | R | S | I | U | E | R |
| S | I | T | E | N | D | R | E | T | A | T | I | E |
| K | N | O | W | L | E | D | G | E | S | M | O | T |
| T | N | S | E | D | E | U | G | V | A | M | V | E |
| L | R | Q | D | I | S | O | B | E | Y | E | D | E |
| T | D | E | L | O | R | E | D | E | L | I | Q | U |
| Z | T | E | E | F | E | U | G | A | A | D | A | M |

| | | | |
|---|---|---|---|
| ADAM | EDEN | FRUIT | KNOWLEDGE |
| DISOBEYED | EVIL | GARDEN | SERPENT |
| EAT | EVE | GOOD | TREE |




CROSS WORD

# Genesis: 3

JUNIOR INTER




**Across**

4. God told Adam and Eve that when they eat the fruit of the tree, their eyes would be opened and will be like God knowing _____ ________ ________. (Three words)
6. Who ate the forbidden fruit first --- Adam or Eve?
8. After the woman (Eve) ate the forbidden fruit, she gave some to her ___________ and he ate it.
15. Because Adam and Eve ate the forbidden fruit, mankind would eat the ___________ of the field.
16. Who said, "Did God really say, 'You must not eat the fruit from any tree in the garden.'"?
17. After Adam and Eve ate the forbidden fruit, they realized they both were ___________.
19. The woman (Eve) saw the fruit of the tree was ___________ for food and pleasing for the eye.
20. The serpent said to Adam and Eve, "Did ___________ really say you are not to eat the forbidden fruit?"

**Down**

1. When Adam and Eve realized they were naked, they sewed ___________ leaves together for coverings.
2. The offspring of Eve will crush the serpent's ___________.
3. The serpent told the woman (Eve) that if she would eat the fruit, she would not _________.
5. God told Adam that he was only ___________ of the ground.
7. The Lord said to the serpent that He would create ___________ (hostility). (Genesis 3:15)
9. After Adam and Eve ate the forbidden fruit, God asked Adam, "Where are you?" Adam said he was ___________.
10. To the serpent for deceiving Adam and Eve into sin, God said, "___________ are you above all livestock and all the wild animals."
11. The serpent promised ___________ to Adam and Eve when they were to eat the forbidden fruit.
12. To the woman God said He would greatly increase her ___________ in bearing children.
13. Because Adam and Eve ate the forbidden fruit, the ___________ would be cursed and it would grow thorns and thistles.
14. After Adam and Eve ate the forbidden fruit, did they realize what they did?
18. Husband of Eve





# THE FALL OF ADAM & EVE

INTER, SENIOR, TEENS

1. What did Adam do after Eve obeyed the animal and transgressed against the Lord's commandment?

2. What would NOT happen to anyone who would partake of such fruit?

3. 4What did the Lord NOT do as a result of the disobedience of Adam and Eve?

4. How did God Say for their wrongdoings...?


5. How do you think God felt when the people he took care of disobeyed him?

6. How might we influence others to sin?

7. How can we influence others to do what is right?



AND DAVID SAID UNTO GAD, I AM IN A GREAT STRAIT: LET ME FALL NOW INTO THE HAND OF THE LORD; FOR VERY GREAT ARE HIS MERCIES: BUT LET ME NOT FALL INTO THE HAND OF MAN.



HOW MANY TIMES SHOULD YOU TRY?
by Anna Vital
3 times Steven Spielberg was rejected by University of Southern California, after which he dropped out to become a director
25 times Tim Ferris's book The 4 Hour Work Week was rejected by publishers
400 times Richard Branson launched companies before he founded one 'out of this world' [Virgin Galactic]
300 times founder of Pandora.com approached investors before he got funding
162 times the author of this infographic made searches for this data
1009 times Colonel Sanders who just started KFC was turned down when he tried selling his fried chicken recipe
1500 times Sylvester Stallone was rejected when he tried selling his script and himself as the film 'Rocky'
Funders and Founders
5126 times James Dyson created failed prototypes of his vacuum cleaner before succeeding
10000 times Thomas Edison created failed prototypes of his electric bulb before succeeding
HOW MANY TIMES WILL YOU TRY?

# Manna Participants December

| Kids Colouring | Word Search | Cross Word | Bible Quiz |
|---|---|---|---|
| JEMIMA ASHNI | AJINSHA | AJINSHA | ROSHAN |
| JEREMIAH | SHERINSHA | SHERINSHA | AJINSHA |
| JESIL BERNICE | JASON ERIC | JASON ERIC | SHERINSHA |
| HAZEL HARTLYN | JOHAN SANJO | JOHAN SANJO | |
| CHRIS GABRIEL | JEREMIAH | JEREMIAH | |
| JANIA PRENI | JONATHAN | JONATHAN | |
| JOHAN SANJO | | | |
| REAGAN SHAN | | | |
| CRASSLIN DEVONA | | | |




ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன்
ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**EMAIL SUBJECT: YOUR NAME / QUIZ TYPE / MONTH-YEAR**

**TO CHURCH EMAIL: CSITCALAIN@GMAIL.COM**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

**YOU CAN ALSO DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE**

***http://www.csitamilparishalain.org***

திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




# PHILIPPIANS & COLOSSIANS

# பிலிப்பியர் & கொலொசெயர்

## JAN'22-QUESTIONS

1. பவுல் எதற்கு தேவனை சாட்சியாக குறிப்பிடுகிறார் ?
2. எல்லாவற்றையும் ______________, ______________ செய்யுங்கள்.
3. பவுல் யாரை உங்களிடத்தில் அனுப்புவேன் என்றார் ?
4. யாருக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் ?
5. எவைகளை சிந்திக்க வேண்டும் ?
6. எவைகளுக்கு பாத்திரமாய் நடக்க வேண்டும் ?
7. பவுல் எதை மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன் என்றார் ?
8. பவுல் எவைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றார் ?
9. மனப்பூர்வமாய் செய்ய வேண்டியது எது ?
10. பவுல் என் செய்திகளை உங்களுக்கு அறிவிப்பான் என்று யாரை சொன்னார் ?




### டிசம்பர் 'மாத விடைகள் / எழுதியவர்கள்

1. கலாத்தியர்: 1:18 | 2. கலாத்தியர்: 2:3 | 3. கலாத்தியர்: 4:22
4. கலாத்தியர்: 5:14 | 5. கலாத்தியர்: 6:5 | 6. எபேசியர்: 2:16
7. எபேசியர்: 3:7 | 8. எபேசியர்: 4:13 | 9. எபேசியர்: 5:5 | 10. எபேசியர்: 6:12

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார்,
திருமதி.ஹெப்சிபாய் நேசமணி, திருமதி.விவிலின் ஜூனா ஜெயக்குமார்,
திருமதி.பிப்லின் நெல்சன், செல்வி.அஜீன்ஷா, செல்வி.ஷெறின்ஷா,
திருமதி.பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி.ஜமுனா ராணி, திருமதி.ஹெலன் கம்பீரம்,
திருமதி.அகஸ்டா லாரன்ஸ், திருமதி.பமீலா டேனியல்,
திருமதி.ரோஸ்லின் பாலாஜி, செல்வி.ஜெறின் மேக்டலின், திருமதி.ஷெரின் டியென்ஷன்,
திருமதி.ஜெயந்தா ஜாண், திருமதி.அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**
**Your Name / Bible Quiz / Jan'22 | Sent to: csitcalain@gmail.com**




பிரியமானவர்களே…

ஒவ்வொன்றாய் கிழிக்கப்பட்டு ஒரே ஒரு காகிதத்தோடு இன்று ஓரமாய் தொங்கிக் கொண்டிருக்கிறது பழைய நாள்காட்டி.. நம் வாழ்வில் வேகமாய் ஓடிய நாட்களுக்கு இன்று அதுவே சாட்சி... ஆண்டுகளில் பிறப்பது புதிதல்ல புதிய ஆண்டுகள் பிறந்து கொண்டுதான் இருக்கும்

புத்தாண்டை வெறும் அடுத்த ஆண்டின் துவங்கமாக எண்ணி நாம் கடந்து போக முடியாது. அனைவரும் கூடி, மகிழ்ந்து, அன்பை வெளிப்படுத்தும் ஒரு அற்புதமான நாளே புத்தாண்டு. நள்ளிரவு பனிரெண்டு மணிமுதல் நமது கைப்பேசிகளில் வாழ்த்து செய்திகள் நிறையும்; அதை படித்து நமது மனமும் நிறையும். புத்தாண்டில் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம் இருக்கும். அதே போல சில தீயவைகளை இனியும் தொடரக்கூடாது என்றொரு எண்ணமும் இருக்கும். இப்படி பலரது மனதில் பல எண்ணங்கள் புத்தாண்டின் முதல் நாளில் ஓடும். ஆனால் பரிசுத்த வேத்தத்தின் அடிப்படையில்; நம்மை உண்டாக்கிய ஆண்டவருக்கு இந்த புதிய ஆண்டில் என்ன செய்ய நம்மை அற்பணிக்கிறோம் என்பதே முக்கியம்.

உலகத்தை அழிக்க விரும்பும் ஒரு கூட்டம் ஓய்வின்றி அலைவதுபோல்… ஆத்துமாக்களை காப்பாற்ற விரும்பும் கிறிஸ்துவின் படையும் அலைய வேண்டுமே…!!! மத்தேயு 3:9 கூறுவது போல் நம்மை நியாயம் தீர்க்கும் கோடாரி தயாராகிவிட்டது… கிறிஸ்து நமக்காய் பரிந்து பேசி நமது வாழ்வில் ஓர் ஆண்டை கூட்டியிருக்கிறார்… இந்த சிந்தனையோடு புதிய ஆண்டுக்குள் செல்வோம்.

சென்ற ஆண்டில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறாமலிருப்பதெப்படி..? நாம் நினைத்ததற்கும் மேலானவைகளை அவர் செய்தாரே.. இன்னமும் செய்கிறார்.. அவருடைய வழிநடத்துதலை அனைத்து நிலைகளிலும் உணர்ந்தோம்… அவருக்கு கோடான கோடி நன்றி. நமது திருச்சபையில் கிறிஸ்துமஸ் காலங்களில் நடந்த அனைத்து ஆராதனைகளையும் கர்த்தர் நமக்கு ஆசிர்வதித்து தந்தமைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். பண்டிகை நாட்களை தாயகம் சென்று உற்றார் உறவினர்களோடு கழித்த தேவப்பிள்ளைகளை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். உங்கள் பண்டிகை காலங்களை கிறிஸ்துவுக்குள் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன்.

உங்களது அயராத ஒத்துழைப்பு, அனுதின ஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை அதிகமாய் துதிக்கிறேன். கர்த்தர் மென்மேலும் உங்களையும் உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக. திருச்சபை மக்கள் இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

உலகம் முழுக்க இந்த புத்தாண்டை உன்னதமாக கொண்டாடுகிறது... ஆனால் நம்மில் சிலர் சொந்தங்களை பிரிந்து சோகத்தில் வாடுகிறேம் வேறொரு நாட்டில்.

நல்லவற்றை நினைப்போம், உதவிகள் பல செய்வோம், மனித நேயத்தை காப்போம், பொல்லாத காலம் எல்லாம் போனது என்று எண்ணி இப்புத்தாண்டை இனிமையாய் கழிப்போம். புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள், புதிய உறவுகள், புதிய உணர்வுகள், புதிய நம்பிக்கை, என என அனைத்தும் புதிதாய் பழைய சொந்தங்களோடு மலரட்டும் இந்த புத்தாண்டு..

**உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.**

இப்படிக்கு
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்




**SPECIAL THANKS TO...**

**THE PRESBYTER, ALL THE MINISTRY LEADERS, EVENT COORDINATORS, SUPPORT TEAMS & MEMBERS FOR YOUR WONDERFUL SUPPORT, OFFERING, AND ENCOURAGEMENTS IN 2021. WE REALLY APPRECIATE THE EFFORT YOU PUT TO MOVE THE CHURCH FORWARD, YOUR TIME AND RESOURCES HAVE BEEN INVESTED IN THE CHURCH ARE HIGHLY APPRECIATED.**

**WE LOOK FORWARD TO YOUR CONTINUED SUPPORT IN THE YEARS TO COME.**

**GOD BLESS YOU ALL...**

**- THE CHURCH EXECUTIVE COMMITTEE.**

# DAILY BIBLE READING - January – 2022

## “Your word is a lamp to my feet and light for my path”

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| *1* | *மத்தேயு 1* | *Mathew 1* | | *ஆதியாகமம் 1* | *Genesis 1* | |
| *2* | *மத்தேயு 2* | *Mathew 2* | | *ஆதியாகமம் 2* | *Genesis 2* | |
| *3* | *மத்தேயு 3* | *Mathew 3* | | *ஆதியாகமம் 3* | *Genesis 3* | |
| *4* | *மத்தேயு 4* | *Mathew 4* | | *ஆதியாகமம் 4* | *Genesis 4* | |
| *5* | *மத்தேயு 5* | *Mathew 5* | | *ஆதியாகமம் 5* | *Genesis 5* | |
| *6* | *மத்தேயு 6* | *Mathew 6* | | *ஆதியாகமம் 6* | *Genesis 6* | |
| *7* | *மத்தேயு 7* | *Mathew 7* | | *ஆதியாகமம் 7* | *Genesis 7* | |
| *8* | *மத்தேயு 8* | *Mathew 8* | | *ஆதியாகமம் 8* | *Genesis 8* | |
| *9* | *மத்தேயு 9* | *Mathew 9* | | *ஆதியாகமம் 9, 10* | *Genesis 9,10* | |
| *10* | *மத்தேயு 10* | *Mathew 10* | | *ஆதியாகமம் 11* | *Genesis 11* | |
| *11* | *மத்தேயு 11* | *Mathew 11* | | *ஆதியாகமம் 12* | *Genesis 12* | |
| *12* | *மத்தேயு 12* | *Mathew 12* | | *ஆதியாகமம் 13* | *Genesis 13* | |
| *13* | *மத்தேயு 13* | *Mathew 13* | | *ஆதியாகமம் 14* | *Genesis 14* | |
| *14* | *மத்தேயு 14* | *Mathew 14* | | *ஆதியாகமம் 15* | *Genesis 15* | |
| *15* | *மத்தேயு 15* | *Mathew 15* | | *ஆதியாகமம் 16* | *Genesis 16* | |
| *16* | *மத்தேயு 16* | *Mathew 16* | | *ஆதியாகமம் 17* | *Genesis 17* | |
| *17* | *மத்தேயு 17* | *Mathew 17* | | *ஆதியாகமம் 18* | *Genesis 18* | |
| *18* | *மத்தேயு 18* | *Mathew 18* | | *ஆதியாகமம் 19* | *Genesis 19* | |
| *19* | *மத்தேயு 19* | *Mathew 19* | | *ஆதியாகமம் 20* | *Genesis 20* | |
| *20* | *மத்தேயு 20* | *Mathew 20* | | *ஆதியாகமம் 21* | *Genesis 21* | |
| *21* | *மத்தேயு 21* | *Mathew 21* | | *ஆதியாகமம் 22* | *Genesis 22* | |
| *22* | *மத்தேயு 22* | *Mathew 22* | | *ஆதியாகமம் 23* | *Genesis 23* | |
| *23* | *மத்தேயு 23* | *Mathew 23* | | *ஆதியாகமம் 24* | *Genesis 24* | |
| *24* | *மத்தேயு 24* | *Mathew 24* | | *ஆதியாகமம் 25* | *Genesis 25* | |
| *25* | *மத்தேயு 25* | *Mathew 25* | | *ஆதியாகமம் 26* | *Genesis 26* | |
| *26* | *மத்தேயு 26* | *Mathew 26* | | *ஆதியாகமம் 27* | *Genesis 27* | |
| *27* | *மத்தேயு 27* | *Mathew 27* | | *ஆதியாகமம் 28* | *Genesis 28* | |
| *28* | *மத்தேயு 28* | *Mathew 28* | | *ஆதியாகமம் 29* | *Genesis 29* | |
| *29* | *மாற்கு 1* | *Mark 1* | | *ஆதியாகமம் 30* | *Genesis 30* | |
| *30* | *மாற்கு 2* | *Mark 2* | | *ஆதியாகமம் 31* | *Genesis 31* | |
| *31* | *மாற்கு 3* | *Mark 3* | | *ஆதியாகமம் 32* | *Genesis 32* | |

# CSI Tamil Parish - Al Ain, UAE

# சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை - அல்யென்

"BUT CONCERNING THAT DAY OR THAT HOUR, NO ONE KNOWS, NOT EVEN THE ANGELS IN HEAVEN, NOR THE SON, BUT ONLY THE FATHER." MARK 13:32

# 2022

## CHURCH PROGRAM SCHEDULE (TENTATIVE)

| | |
|---|---|
| **Jan 08** | **Covenant Service** |
| **Jan 15** | **CBS Start Date / Term-1** |
| **Feb 12** | **Harvest Festival'2021** |
| | **Picnic-2022** |
| **Mar 02** | **Ash Wednesday - Service** |
| | **40 Days - Lent Daily Service** |
| **Mar 05** | **Mission Friday** |
| **Mar 12** | **Womens Fellowship - Special Service** |
| | **Vacation Bible School** |
| | **Passion Chorale (Sing Song Service)** |
| Apr 10 | Palm Sunday |
| Apr 15 | Good Friday |
| Apr 17 | Easter Service |
| Apr 23 | 13th Church Day |
| | Sports Meet |
| Apr 30 | Annual General Body Meeting |
| May 07 | Bible Quiz Contest / Adults |
| Jun 04 | CBS 1st Term Exam |
| Jun 11 | CBS Special Service |
| Aug 13 | Youth Fellowship - Special Service |
| Sep 02 | Champions For Christ - CBS Event |
| Sep 03 | CBS Re-open / Term-2 |
| Oct 29 | Harvest Festival 2022 |
| Nov 19 | Mens Fellowship - Special Service |
| Nov 19 | CBS 2nd Term Exam |
| Dec | Btwn 1st to 10th Dec - Carol Rounds |
| Dec 10 | CBS Christmas Programs |
| Dec 17 | Christmas Carol Service |
| Dec 24 | Christmas Tree & Sing Song Service |
| Dec 25 | Christmas Service |
| Dec 31 | 12- Hrs Chain Prayer |
| Dec 31 | Year End / New Year Service |

### January '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### February '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

### March '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### April '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### May '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### June '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### July '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

### August '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### September '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### October '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### November '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### December '22

| S | S | M | T | W | T | F |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

Thanks be to God for his indescribable gift...! 2 Corinthians 9:15

Evangelical Church Centre Campus | Al ain | United Arab Emirates

Tel no:(+971) 03 766 8353 | Email : csitcalain@gmail.com | www.csitamilparishalain.org

Note: This Schedule is subject to change based on any unforseen circumstances / Presbyter Commitments / any other reasons. Any changes will be updated on weekly announcements.

Happy

# NEW YEAR

# 2022

May the New Year bring you warmth, love, and light
to guide your path to a positive destination.

BEST WISHES

from

# C.S.I TAMIL PARISH, ALAIN- UAE

EDITOR
THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 766 8343
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY